1983 பிப்ரவரி 10] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

விளை பொருள் அங்காடி இயக்குநர் அலுவலகத்தை திருச்சிக்கு மாற்றினீர்கள். இதனால், பெரிய இலாபம் ஒன்றும் அரசாங்கத்திற்கு இல்லை. இதனால், தொல்லைதான் ஏற்பட்டு உள்ளது. எங்களுக்கு கிடைக்கிற செய்தி—அமைச்சர் அவர்கள் சென்னையில் இருக்கிறார்; செயலாளர் அவர்கள் சென்னையில் இருக்கிறார்; இந்த இயக்குநர் அலுவலகம் மட்டும் திருச்சியில் வைத்திருக்கிறீர்கள். அவர் அமைச்சரைப் பார்க்க வேண்டும், செயலாளரைப் பார்க்க வேண்டும் என்றால் பல நேரங்களில் திருச்சியிலேயிருந்து சென்னைக்கு ரெயிலிலே வருவது, திரும்பவும் சென்னையிலிருந்து திருச்சிக்குப் போவது என்று இருக்கிறார்; ரெயிலில் போகிறபோதுதான் இயக்குநர் பைல்களையே பார்க்கிறார் என்று அங்கே பணிபுரிகின்றவர்கள் சொல்கிறார்கள். இந்த நிலைமை தேவைதானா என்பதை அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும். அப்படி தொல்லைத் தருகிற விவகாரமாக இருக்குமானால் அந்த அலுவலகத்தை சென்னைக்கு மாற்றலாம். அதிலே பிரச்சினை இருக்கப்போவதில்லை. அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தனி அதிகாரிகள் பல ஒழுங்குமுறை விற்பனைக கூடங்களில், தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில், 5, 6, ஆண்டுகளாக ஒரே அதிகாரிதான் இருக்கிறார். அவர்களை எல்லாம் மாற்ற வேண்டும். தனி அதிகாரிக்கும் அங்கே இருக்கிற செயலாளருக்கும் ஒருமித்த கருத்து இருப்பதில்லை. தனி அதிகாரி என்ன சொல்வது நாம் என்ன கேட்பது என்று நடந்து கொள்கிறார்கள். அவர்களிடத்தில் சுமூகமான உறவு இருப்பதில்லை. செயலாளர், தனி அதிகாரி சொல்வதை நிறைவேற்றுவதில்லை. இப்படிப்பட்ட நேரங்களில் பணிபுரிகின்ற அலுவலர்களுடைய பல்வேறு பிரச்னைகள் வருகின்றன. சில அலுவலர்கள் பதவி உயர்வு பெறவேண்டும். சில அலுவலர்களுடைய சம்பளம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவுகளின் மீதான விவாதம் தொடர்ந்து மீண்டும் நாளை நடைபெறும்.

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.
அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தற்போது முடிவு பெறாமல் இருக்கும் சட்ட முன் வடிவுகள் நாளை காலை எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்—வறட்சி குறித்து வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு எடுத்துக்கொள் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

128-289—16